9 - JUL 1982

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன்—தலைமைக் கருவூலம் என்பது மாவட்டத் தலை நகரங்களிலே அமைந்திருக்கும் ஒன்றாகும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரில் தலைமைக் கருவூலமும், மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்களும், மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற துணை வட்டங்களில் துணைக் கருவூலங்களும் அமைக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் தலைமைக் கருவூலங்கள் அமைக்கப்படும்; மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்கள்தான் அமைக்கப்படும்.

அரசு பரிசுச் சீட்டில், பரிசுத் தொகையை வாங்காததால் சேர்ந்துள்ள தொகை

*வினா 22—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979–80 ஆம் ஆண்டுகளில் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979–80 ஆம் ஆண்டில் சேர்ந்த தொகை ரூபாய் 68,12,500 ஆகும்.

திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படி பரிசுச் சீட்டின் மூலம் அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் தொகைகள் குறிப்பாக, தமிழக தனி நல்வாழ்வு நிதிக்கும், குடிநீர் வழங்குகின்ற பணிக்கும், அரிசனங்களுக்கு வீட்டு மனை வாங்குகின்ற பணிக்கும், தேசியப் பாதுகாப்பு நிதி அளிக்கின்ற பணிக்கும், முதலமைச்சருடைய பெருவெள்ளம், பெரும் புயல் ஆகியவற்றால் சேதம் ஏற்படுகின்ற நிவாரண நிதிக்கும், முதலமைச்சருடைய பெயரால் அமைந்துள்ள பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கும் பல்வேறு வகைகளிலே அவ்வப்போது கிடைக்கின்ற நிதி பிரித்து அளிக்கப்படுகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு நடத்துகின்ற வகை மாவட்டந்தோறும் நடத்துவதற்கான குறிப்பு ஒரு காலத்திலே இருந்தது. அரசு அதைப் பற்றிச் சிந்தித்து ஆவன செய்ய முடிவெடுக்குமா ?

[1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இல்லை. மாநில அளவிலே நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். முன்பு மாதத்திற்கு ஒரு தடவை என்றிருந்தது ; இப்போது மாதத்திற்கு இரண்டு தடவைகள் என்ற முறையில் பரிசுச் சீட்டுக்களை வழங்கி வருகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, ஒரே ஆண்டில் 68 லட்சத்திற்கும் அதிகமான பரிசுத் தொகை வாங்காததால் இருக்கின்றது என்று சொன்னார்கள். அப்படியானால், மக்களிடம் இந்தப் பரிசுச் சீட்டில் அக்கறை குறைந்திருப்பதைக் காட்டுகிறது. ஒரே பரிசுச் சீட்டு விழுந்து, ஒரே எண்ணுள்ள இரண்டு சீட்டுகளுக்குப் பரிசு கொடுக்கப் பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1979–80-ல் மட்டும் சிறப்புக் குலுக்கல் சீட்டு மூன்று தடவையும் சாதாரண குலுக்கல் எட்டு தடவையும் ஆக மொத்தம் 11 தடவைகள் குலுக்கல்கள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,17,90,000. அதிலே வழங்கப்பட்டது ரூ. 1,49,77,500. அதிலே வாங்காமல் உள்ள தொகை ரூ. 68,12,500. அநேகம் பேர் சீட்டு விழுந்திருந்தாலும் சீட்டைத் தொலைத்திருக்கக்கூடும், மறந்திருக்கக்கூடும், திரும்பிப் பார்க்காமல் இருந்திருக்கக் கூடும். பதினோரு குலுக்கல்களுக்கும் சேர்த்துத்தான் இந்தத் தொகை. ஒரே எண் உள்ள சீட்டை இருவர் கொண்டுவரக் கூடிய நிலைமை வந்தால் விவகாரம் வருகிறபோது அதை முறைப்படி தீர்க்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீட்டு குலுக்கல் நடந்து குறிப்பிட்ட ஒரு மாத காலத்திற்கு வாங்காமல் விட்டதற்குப் பிறகுதான் அரசின் நிதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் சிறப்புப் பரிசு 10 லட்சம், ஒரு லட்சம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, தமிழக மட்டத்திலே தான் சீட்டுகள் விற்பனையாகின்றன, இந்திய அளவிலே வாங்கப்படுவதில்லை. ராஜஸ்தானிலே சிறப்புப் பரிசு 51,00,000 ரூபாயாக இருக்கிற காரணத்தினால் இந்தியா பூராவும் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அதனால் அந்த அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக அரசும் ஒரு கோடி பரிசுத் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழகம் மட்டுமல்லாமல் இந்திய அளவிலே தேசியப் பரிசுச் சீட்டாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1981 ஆகஸ்ட் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் பரிசுச் சீட்டுகள் நடத்தி வருகிறார்கள். நாம் சீராகவும், சிறப்பாகவும், முறையாகவும் துவளாத அளவுக்கு நடத்தி வருகிறோம். பொதுவாக அரசு ஒரு கோடி அளவுக்குப் போய்விட்டால் பிறகு ஊர்க் கோடிக்கும் நாட்டுக் கோடிக்கும் போக வேண்டிய அவசியம் வந்து விடும். ஒரே சீராக நடத்த வேண்டும், முறையாக நடத்தவேண்டும், அதிக அளவு மேலேயும் போகாமல் அதிக அளவு கீழேயும் இறங்காமல் சீரான அளவுக்கு வருமானத்தை அதன் மூலம் பெற்று மக்களுடைய நலப் பணிகளுக்குச் செலவழிக்கும் சூழ்நிலையில் நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, 68,12,500 ரூபாய் பரிசு பெற்றவர்கள் பெறவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இனி அந்தப் பரிசுச் சீட்டுகளுக்கு ஒரிஜினல் டூப்ளிகேட் என்று வைத்து யார் வாங்குகிறார்களோ அவர்களுடைய பெயர்களையும் முகவரிகளையும் குறித்தால் சீட்டு விழுந்த அனைவரும் பரிசுகளைப் பெற வழி ஏற்படும் அல்லவா? அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பரிசுச் சீட்டு யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்று பெயர் விவரங்களைக் குறிக்க இயலாது. ஏஜெண்டுகள் மற்றவர்கள் வேண்டுமானால் அதை வைத்துக் கொள்ளலாம். அரசு அதற்கு ஒன்றும் செய்ய இயலாது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் எப்போது வேண்டுமானாலும் பரிசுச் சீட்டைக் கொண்டு வந்து காட்டி பணத்தை வாங்கிக் கொள்ளலாம். அப்படி வாங்காது விடப்படுவது அரசுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

திரு. மி. வின்செண்ட் : பரிசுச் சீட்டு விற்பனை ஆண்டுக்காண்டு கூடி வருகிறதா அல்லது குறைந்து வருகிறதா? மின்ராபில் திட்டத்தைக் கொண்டு வர அரசு உத்தேசித்து வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தைப் பொறுத்தவரை ஓரளவு ஒரே சீரான அளவிலேதான் நடத்திக் கொண்டு வருகிறோம். சீரான அளவிலேதான் வருமானம் ஆண்டுக்காண்டு கிடைத்து வருகிறது. மற்றைய மாநிலங்களில், புதிதாக நடத்தும் மாநிலங்களில் கூட நாளுக்கு நாள் பரிசு குலுக்குவது போன்று நடத்தி வருகிறார்கள். போட்டி போட்டுக்கொண்டு நடத்தி வருகிறார்கள். ஏராளமான பரிசுச் சீட்டுகள் நாடெங்கிலும் விற்பனையாகின்றன. அவை அத்த

[1981 ஆகஸ்ட் 24

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் மீன்பிடி துறைமுக வேலை நீண்ட நாட்களாக முடிக்கப்படாமல் இருக்கிறது என்ற குறைபாடு மக்களிடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. கடந்த 2, 3 வரவு—செலவுத் திட்டங்களின் குறிப்புகளிலேயும் இந்த மீன்பிடி துறைமுகத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று வரை அந்த வேலை முடிக்கப்படவில்லை. சீக்கிரமாக அதை முடிக்க அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது. மாநில அரசினுடைய மேற்பார்வையின் கீழ் இந்த வேலைகள் நடைபெறவில்லை, மத்திய அரசின் மேற்பார்வையில் சென்னை துறைமுகத்தினரே இந்த வேலைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் கூறியிருக்கிற குறிப்பில், இத்துறைமுகத்திலே கட்டுமானப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. படகுத் துறை வேலை முடிவுற்றது. படகு தங்குமிடம், ஆழப்படுத்துதல் முடிவுறும் நிலையில் உள்ளது. அலை தடுக்கும் சுவர் கட்டிமுடிக்கப்பட்டு இருக்கிறது. அதன் மீது சாலை போடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. நிர்வாக அலுவலகக் கட்டட வேலை முடிந்துவிட்டது. இதர வேலைகளான மீன் ஏலம் விடும் கூடம், மீன்களைப் பிரித்து பிரச்சாரம் செய்து வெளியிடங்களுக்கு அனுப்பும் கூடம், படகுகளைப் பழுதுபார்ப்பதற்கான சறுக்கு வழி, தண்ணீர்க் குழாய்கள், மற்றும் மின் இணைப்புகள் ஆகிய வேலைகள் முடிக்கப்படவேண்டும். 1981ஆம் ஆண்டிற்குள் எல்லா வேலைகளும் முடிவடையும் என்றும் துறைமுகத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : இராயபுரம் மீன்பிடி துறைமுகத்திற்குப் பக்கத்திலே மீன்களைக் காயப்போடும் சாதனங்கள் உள்ள இடம், பனிக்கட்டியில் வைக்கக்கூடிய சாதனங்கள் உள்ள இடம் அந்தச் சாதனங்களை உற்பத்தி செய்யக்கூடிய இடம் ஆகியவற்றைக் கட்டக்கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றியவிவரக் குறிப்புகள் தற்போது இல்லை. மீன்களை ஏலம் போடுகிற இடம், மீன்களைப் பிரித்து பார்சல் செய்கிற கூடம் ஆகியவைகள் கட்டப்படுவதாக செயற்குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்றகுறிப்பு இல்லை, தனிக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.